**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.5/2025**
Prosecution: **PW1**

Deposition of the witness of **LW1**

| Name | திரு.சுதாகர் | District | இராணிப்பேட்டை |
|---|---|---|---|
| Father Name | திரு.பழனி | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | விளாபாக்கம் | Age | 27 |
| Taluk | ஆற்காடு | ID card No. | -- |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **27.11.2025.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள விளாபாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். இராணிப்பேட்டையிலுள்ள சிப்காட்டில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள். 24.10.2022-ம் தேதி இரவு 11.00 மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த ஆறுமுக ஆச்சாரி வீட்டின் அருகில் உள்ள பெருமாள் கோவிலினிடம் நானும், அஜித் குமார், அண்ணாமலை, ராகுல், வினோத் ஆகியோர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் 4 பேரும் நாங்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். எங்களை பார்த்து கிருஷ்ண ஜெயந்தி திருவிழா கணக்கை கேட்டார்கள். அந்த கணக்கு சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்த போது வாய் தகராறு ஏற்பட்டது. எதிரிகள் எங்களிடம் பிரச்சனை செய்ததால் நாங்கள் அங்கிருந்து சென்றுவிடலாம் என்று வீட்டிற்கு செல்லும் போது கோகுல் என்பவர் அவரது கையால் என் கண்ணத்தில் அறைந்தார். அப்போது பேசிக்கொண்டிருக்கும் போதே எதிரி யுவராஜ் என்பவர் தன்னுடைய பேண்ட் பின்பக்க பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து அஜித் குமாரை அவரது வயிறு, நெஞ்சு, முதுகு பகுதிகளில் கத்தியால் கிழித்தும் மற்றும் ஆங்காங்கே உடலில் கத்தியால் கீறியும் ரத்தக்காயம் ஏற்படுத்தினார். அதை தடுக்க சென்ற என்னை யுவராஜ் அதே கத்தியால் வலது கணுக்கால், இடது கால் தொடை பகுதிகளில் கிழித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார். சத்தம் கேட்டு அங்கு

அண்ணாமலை என்பவர் ஓடிவந்து அவர் தடுக்க முயன்ற போது எதிரி யுவராஜ் கத்தியால் வெட்டியதில் அண்ணாமலையின் வலது கையின் நடுவிரல் மற்றும் மோதிரவிரல்களில் ரத்தக்காயம் ஏற்பட்டது. மற்ற எதிரிகள் எங்களை பார்த்து நீங்கள் எல்லாம் தாதாவா என்றும், உங்களை குளோஸ் பண்ணிவிடுவோம் என்றும் மிரட்டினார்கள். அக்கம் பக்கத்திலிருந்த பெருமாள், வினோத் ஆகியோர் அங்கு வந்தவுடன் எதிரிகள் அனைவரும் அங்கிருந்து ஓடிவிட்டனர். பின்னர் காயம்பட்ட அஜித்குமாரையும், அண்ணாமலை என்பவரையும் ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு அங்கிருந்தவர்கள் அழைத்து சென்றனர். நான் என்னுடைய நண்பர் உதவியுடன் இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைப் பெற்றேன். அஜித் குமாரை மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக கேள்விப்பட்டேன். சம்பவ நாள் அன்று இரவு என்னை உதவி ஆய்வாளர் எஸ்.எம்.எச் மருத்துவமனையில் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியை தான் எதிரி யுவராஜ் சம்பவத்தில் பயன்படுத்தினார். அந்த கத்தி **சா.பொ.1** ஆகும். பின்னர் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையை நிறுத்தி வைத்து வழக்கை ஒத்திவைக்க கு.வி.மு.ச பிரிவு 231(2)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.11.27 16:55:49 -0500

I Additional District & Sessions Judge,
Ranipet.